# கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு

## தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு குத்தகை அடிப்படையில் கட்டிட வளாகம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல்

விலைமனு இல.: NIPO/09/2017

1. தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக குத்தகை அடிப்படையில் கட்டிடம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரலின் கீழ் விலைமனு கோரல் மேற்கொள்ளப்படும்.
3. குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற அலுவலக வளாகம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகவல்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

- அமைவிடம் : கொழும்பு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசம் / பத்தரமுல்ல / ராஜகிரிய பிரதான வீதியில் அல்லது கிளை வீதி ஒன்றிலாயின் பிரதான வீதியிலிருந்து கிட்டத்தட்ட 200 மீற்றர்கள் அளவு தூரத்தில் அமைந்திருத்தல் மற்றும் நுழைவாயில் 20 அடியளவில் அகலமாயிருத்தல்.

- தேவையான இடப்பரப்பின் அளவு : சதுர அடி.12,000 மற்றும் சதுர அடி 15,000 இற்கு இடைப்பட்ட நிலப்பரப்பினைக்கொண்ட வளி பதனிடப்பட்ட மற்றும் தேவையான ஏனைய வசதிகளைக்கொண்ட கட்டிடம் ஒன்றாக இருத்தல் வேண்டும். மேற்படி இடப்பரப்பு அலுவலக அறைகள், கேட்போர் கூடம் மற்றும் வரவேற்புப் பகுதி என்ற வகையில் வேறாக்கி பயன்படுத்த இயலுமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உரிய இடப்பரப்பு தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்கு தேவைப்படும் பட்சத்தில் மாற்றிமைத்துக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.மேலும் உரித்தாளர் மேற்படி மாற்றங்களை மேற்கொள்வதற்கு உடன்பாட்டினைப் பெற்றுத்தருதல் வேண்டும்.

- வாகனங்கள் தரிப்பிடம்: ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 10 வாகனங்களை நிறுத்துவதற்கான வசதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- குத்தகைக் காலம் : 05 வருடங்கள் (புதுப்பிக்க முடியும்)

04. மீளச் செலுத்தப்படாத ரூ.3,500 தொகையினைச் செலுத்துவதன் மூலம், கொழும்பு 10, இல.400, டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை,”சமாகம் மெதுர” 3 ஆவது மாடியில் அமைந்துள்ள தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் விலைமனு கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். 2017 செப்தெம்பர் மாதம் 11 ஆந்திகதி முதல் 20 ஆந்திகதி வரை அரச

கடமை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் – பி.ப. 3.00 மணி வரை விலைமனு கோரும் ஆவணங்கள் விநியோகிக்கப்படும். .

05. சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணத்தின் இரண்டு பிரதிகளுடன் ("மூலப்பிரதி" மற்றும் "பிரதி" என தெளிவாகக் குறிப்பிட்டு) 2017 செப்தெம்பர் மாதம் 21 ஆந்திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவோ அல்லது கொழும்பு 10, டீ,ஆர்.விஜேவர்தன மாவத்தை,சமாகம் மதுர இரண்டாவது மாடியில் அமைந்துள்ள தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின், கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவோ வேண்டும். " கட்டிட வளாகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனு" என விலைமனு ஆவணத்தினை உள்ளே இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், அவற்றை திறந்து பார்க்காது மீளத் திருப்பி அனுப்பப்படும். விலைமனு கோரும் நேரம் முடிவடைந்த அதே நேரம் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விலைமனுதாரர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பாக இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் தேசிய புலமைச்செத்துக்கள் அலுவலகத்தின் பெறுகைகள் குழுவினை சார்ந்தது.

8. இது தொடர்பான மேலதிக தகவல்களை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- பணிப்பாளர் மா அதிபதி : 0112669179
- கணக்காளர் ; 0112669177
- நிருவாக உத்தியோகத்தர் : 0112688768

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைகள் குழு
தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்.
3 ஆவது மாடி, "சமாகம் மெதுர"
இல.400,டீ.ஆர். விஜேவர்தன் மாவத்தை
கொழும்பு 10.